## வாசுதேவநல்லூர்,எஸ்.தங்கப்பழம் பாலிடெக்னிக் கல்லூரியில்

# இரத்த தான முகாம்

வாசுதேவநல்லூர் எஸ். தங்கப்பழம் பாலிடெக்னிக் கல்லூரியில் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம், இராஜபாளையம் PACR அரசு மருத்துவமனை மற்றும் இராஜபாளையம் HDFC வங்கி இணைந்து 15.12.2023 அன்று கல்லூரியில் இரத்ததான முகாம் நடைபெற்றது. முகாமிற்கு எஸ்.தங்கப்பழம் கல்வி குழுமத்தின் தலைவர் திரு. எஸ்.தங்கப்பழம் தலைமை தாங்கினார் தாளாளர் திரு.த.முருகேசன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் திரு.சி.பாலமுருகன் வரவேற்புரையாற்றினார். இராஜபாளையம் PACR இரத்த வங்கி மருத்துவ அலுவலர் மருத்துவர் திருமதி.K.கிரிஜா மற்றும் இராஜபாளையம் HDFC வங்கியின் முதுநிலை மேலாளர் திரு. P.முருகன் ஆகியோர் முகாமில் கலந்து கொண்டனர். இராஜபாளையம் PACR இரத்த வங்கி பிரிவு மருத்துவ குழுவினர்கள் மாணவர்களிடம் இரத்த தானம் பெற்றனர். சுமார் 50க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் இரத்த தானம் செய்தனர். இரத்ததானம் வழங்கிய மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர், துறைத்தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர்.